1972 சனவரி 25]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நெய்வேலியிலே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள், சுமார் 18,000 பேர் வரையிலே இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்த போனஸ் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்து இறுதியிலே அது சிக்கலாக முடிகிறதே. ஆகவே, இந்த ஆண்டு அவர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்னாலேயே முக்கிய சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு வைத்து இதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் கோரிக்கை வைத்தாலும் அது சுமுகமாக முடிந்து வருகிறது. இந்த ஆண்டும் அதைப்போலச் செய்ய அரசு ஆவன செய்யும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய தொழிலாளர் அமைச்சரவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகத்தான் 4 சதவீத போனஸ் என்பது 5 சதவிகிதமாக கிடைத்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் சொல்வது உண்மையாகும்.

திரு. எம். சுரேந்திரன் : சார் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்குவது சம்பந்தமாக சமீப காலத்தில் பல விவாதங்கள் நடந்து 8.33 சதவிகிதம் போனஸ் வழங்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டு, நம்முடைய அரசாங்கமும் அது நியாயம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, இப்படி அரசாங்க நிறுவனங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு முதலிலே அதைச் செய்து மற்றவர்களையும் செய்யும்படி தூண்ட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 8 1/3 என்ற சதவிகிதத்தில் போனஸ் தர வேண்டுமென ஐ.எல்.ஓ. மகாநாட்டில் டெல்லியிலே தமிழக அரசால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதே கொள்கையை மற்றும் பல தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு பரிசீலித்து வருகிறது. அது சட்டமாக்கப் பட்டவுடன் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 48 அடிசன்ஸ் அண்டு கம்பெனியில் கதவடைப்பு பற்றியது. அதுபற்றி இங்கு வந்திருக்கின்ற ஒரு சில ஒற்றிவைப்புத் தீர்மானங்களையொட்டி பின்னால் எடுத்துக்கொள்ளப்படலாம் என்று இருப்பதால் இந்தக் கேள்விக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

வலையப்பட்டி கர்ணத்தின் மீது புகார்

*** 49 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள வலையப்பட்டி கர்ணத்தின் மீது அக்கிராம மக்களால் விண்ணப்பம்

28—9—1971 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இஃது மதுரை மாவட்ட அதிகாரியின் பரிசிலனையில் உள்ளது.

Officials of Civil Supplies Department in Coimbatore district

* 50 Q.—THIRU N. DENNIS : Will the hon. the Minister for Food and Revenue be pleased to state whether a number of officials of the Civil Supplies Department in Coimbatore district were suspended for being involved in complicity in the Fake Rice Cards Case?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி வணிகர்கள் மிகுதியாக அரிசி பெறுவதற்காக ஈடுபட்ட முறைகேடுகளில் பங்கு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு ஏழு அதிகாரிகள் பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். இது குறித்துப் புலனாய்வு செய்யப் பட்டு வருகிறது.

THIRU N. DENNIS : May I know from the hon. Minister whether any such occurrence took place in any other place in the State?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது படியரிசித் திட்டம் நடந்த கோயம்புத்தூரில் நடைபெற்ற ஒரு மோசடி. எனவே மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் இருக்க நியாயம் இல்லை. அங்குதான் இது ஏற்பட்டு இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : சார், இதனுலே ரூரல் ஏரியாவில் அவர்கள் வைத்திருந்த உண்மையான கார்டுகள்கூட பறிக்கப் பட்டது அரசுக்குத் தெரியுமா ? அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, போலி கார்டுகளைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் நான் அந்த மாவட்டத்திற்குச் சென்றிருந்தபொழுது அதிகாரிகளோடு பேசி விட்டு வந்தேன். அதன்படி போலி கார்டுகள் கண்டுபிடிக்கப் பட்டன. உண்மையான நிலவரம் என்னவென்றல், இப்பொழுது 1971-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சென்சஸ் கணக்குப்படி கோவை நகரத்திலும், அந்த நகர் சுற்றுப்புறத்திலும் முழுவதும் 6,69,825 ஆகும். ஆனல் 300 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி கொடுப்பதாக அறிவித்திருந்தோம். மக்கள் பயன் அடைகிருர்களோ இல்லையோ கார்டுகள் எண்ணிக்கை 6,32,316 ஆகும். எனவே போலி கார்டுகள் அதிகமாக இருந்த காரணத்தால் கண்டுபிடிக்கப்பட்டன.